உத்தமர்கள் காலடியில் போவதற்கு நானும் தயாராக இருக்கிறேன். ஆனால் நான் அவருக்குத் தெரிவித்த வாழ்த்து தொடருகிறது. அவர் விரும்பினால் அவர் முயற்சியைத் தொடரலாம். இத்தோடு நான் இதனை விட்டுவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது அவையின் இன்னொரு உறுப்பினர் குறித்த பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தால் அவருடைய கருத்தையும் அறிய வேண்டியுள்ளது. அவருடைய கருத்தைத் தெரிவிக்கக் கேட்டுக் கொள்கிறேன். திரு. வி.பி.ஆர். ரமேஷ்.

திரு. வி. பி. ஆர். ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வாழும் கோடிக்கணக்கான மக்களின் பேராதரவைப் பெற்று சென்ற இடமெல்லாம் சீரயும் சிறப்பையும் பெற்று விளங்கும் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பாதத்தைத் தொட்டு வணங்கி அவர்களின் கட்டுப்பாட்டில் வாழும் நாங்கள் மிகவும் கண்ணியத்தோடும் பண்பாட்டோடும் நடந்து கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகு மூத்த உறுப்பினர் மீது மதிப்பும் மரியாதையும் வைத்து இருப்பவன். அவர்களிடம் நீங்கள் நன்றாக பேசுகிறீர்கள். எனக்கு உங்களைப் போன்று சரியாகப்பேச வராது என்றுதான் கூறினேன். தவிர மற்றபடி வேறு எதுவும் பேசவில்லை என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்களுடைய உணர்வையும் இங்கே தெரிவித்தார்கள். திரு. ரமேஷ் அவர்கள் தான் அவ்வாறு பேசவில்லை என்பதோடு திரு. குமரி அனந்தன் அவர்கள் மீது மிகுந்த மரியாதை வைத்திருப்பவர் என்பதை அவையிலே தெரிவித்திருக்கின்ற அந்த கருத்தை ஏற்று இந்தப் பிரச்சினையை இதோடு விட்டுவிடலாம் என்று கருதுகிறேன். இந்தப் பிரச்சினை இதோடு விட்டுவிடப்படுகிறது.

3. தகவல் கோரல்.

ஓர் உறுப்பினர் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டது குறித்து.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சி உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் நேற்று கைது செய்யப்பட்டு பிறகு விடுதலை செய்யப்பட்டு இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இது பற்றி என்னிடத்திலே தெரிவிக்கவில்லை.

1993 ஏப்ரல் 6]

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: இல்லை. இது விதி 288. இது மேன்டேட்டரி புரவிஷன் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த நேரத்தில், இதைப் பற்றித் தெரிவிப்பது என்றால், என்னிடத்திலே தெரிவித்திருக்க வேண்டும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: இதைத் தெரிவிக்க வேண்டும். நான் சபையிலே வைத்திருப்பீர்கள் என்று எதிர்பார்த்தேன். சபையிலே வைக்கப்படவில்லை. . எனவே.... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சபை விதிகளின்படி (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விஷயம் தங்களுக்குத் தெரிவிக்கப்பட்டு இருக்கவேண்டும். பேரவை விதி 290ன் கீழே பேரவை நடந்துகொண்டு இருக்கின்ற நேரத்தில் பேரவையிலே நீங்கள் வைக்கவேண்டும். திரு. ஞானசேகரன் கைது செய்யப்பட்டிருக்கிறார். கைது செய்யப்பட்ட செய்தி தங்களுக்கு அனுப்பப்பட்டதா அல்லது தெரிவிக்கப்பட்டதா இல்லையா? தெரிவிக்கப்பட்டிருந்தால் நீங்கள் சபைக்குத் தெரிவித்திருக்க வேண்டும். உங்களுக்குத் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் காவல் துறையின் தவறு அது. சுட்டிக் காட்டவேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. அது மட்டுமல்ல. அவரோடு அமைச்சர் அவர்கள் தொடர்புகொண்டு பேசியதற்கு பின்னாலே... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மேற்கொண்டு வேண்டாம். என்னிடத்திலே இப்படி விவரம் கேட்க விரும்பினால் பேரவைக்குத் தகவல் வந்திருக்கிறதா, பேரவைக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதோடு சரி, அது விதியின் அடிப்படையிலே கேட்பது. மேற்கொண்டு விவாதத்திற்குள்ளே போவது சரியில்லை. (குறுக்கீடு) நீங்கள் கேட்டதற்குச் சொல்லி விடுகிறேன். பேரவை விதிகளின்படி ஒரு உறுப்பினர் கைது செய்யப்பட்டால், பேரவைத் தலைவருக்கு உடனடியாக காவல் துறையும் அவரை ரிமான்ட் செய்தபோது சிறைத் துறை அதிகாரிகளும் தெரிவிக்க வேண்டும் என்று விதியிருக்கிறது. அந்த விதிகளின்படி உறுப்பினர்கள் கைது செய்யப்படுகிறபோது. எனக்குத் தகவல் வருகிறது அதைப் பேரவைக்கு நான் வைக்கிறேன்.

அதே போல அவர்கள் விடுதலை செய்யப்பட்ட தகவலும் எனக்கு வருகிறது. அதையும் பேரவைக்கு வைக்கிறேன். ஒரு உறுப்பினர் கைது செய்யப்பட்டு அந்தச் செய்தியை நான் பேர

வைக்குத் தெரிவித்திருந்தால், விடுதலை செய்யப்பட்ட தகவல் வந்தவுடன் பேரவைக்குத் தெரிவிக்க வேண்டும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் பொறுத்தமட்டில் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டு விட்டதாக எனக்குத் தகவல் வந்திருக்கின்ற காரணத்தாலே விதிமுறைகளின்படி கைது செய்யப்பட்ட தகவல் வந்து பேரவைக்கு வைத்திருந்தால் தான் விடுதலை செய்யப்பட்ட விவரத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று இருக்கிறது. அந்தத் தகவலைப் பேரவைக்குத் தெரிவிக்காத நிலையில் விடுதலை செய்யப்பட்ட தகவலும் எனக்கு வந்துவிட்ட காரணத்தினால் இதைப் பேரவைக்குத் தெரிவிக்க வில்லை என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். பேரவை விதி எண். 290.

RULE 290 — "As soon as may be, the speaker shall, after he has received a communication referred to in rule 288 or rule 289 read it out in the House if sitting or if the House is not sitting direct that it may be published in the information sheet for the information of the Members;

Provided that if the intimation of the release of a member either on bail or by discharge on appeal received before the House has been informed of the original arrest, the fact of his arrest, or his subsequent release or discharge may not be intimated to the House by the Speaker."

முற்பகல் 11-25

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: பேரவை விதி 290, "எனினும் ஓர் உறுப்பினர் பிணையில் அல்லது மேல்முறையீடு காரணமாக விடுவிக்கப்பெற்றுள்ளதான தகவல், அந்த உறுப்பினர் கைது செய்யப்பட்ட செய்தியை பேரவைக்கு அறிவிக்கும் முன்பே கிடைக்கப்பெறின் அவர் கைாதன செய்திகளையும் அல்லது பின்னால் விடுவிக்கப்பட்ட செய்தியையும் பேரவைத் தலைவர் பேரவைக்கு தெரிவிக்காமல் இருக்கலாம்'' என்று இருக்கிறதே தவிர இதிலே அவர் மேல் முறையீடு செய்யவில்லை அவர் பிணையிலே விடுதலை செய்யப்படவில்லை. அவர் கைது செய்யப்பெற்றிருக்கிறார். சட்டப்பேரவை நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரத்தில் ஓர் உறுப்பினர் கைது செய்யப்படுகின்ற செய்தி என்பது ஒரு முக்கியமான செய்தி. ஏன் கைது செய்யப்பட்டார்? கைது செய்யப்பட வேண்டிய அவசியம் என்ன? நான் எந்தவித விதமான போராட்டத்திலும் ஈடுபடப் போவதில்லை. என்று முன்பே அவர் அறிக்கை விட்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதியை என்னிடத்தில் கேட்டீர்கள். சொன்னேன். அதற்கு மேல் விவாதத்திற்குப் போவதாக இருந்தால் நீங்கள் என்னிடத்தில் எழுதித்

தந்திருக்க வேண்டும். (குறுக்கீடு) இல்லை, இல்லை அப்படி யானால் அவர் ரிமாண்ட் செய்யப்படவில்லை. அவரை அழைத்துச் சென்று இருந்தால் அழைத்துச் சென்ற உடன் விடுவித்துவிட்டார்கள். அந்த இரண்டு செய்தியும் எனக்கு வந்திருக்கிறது. எனவே இந்த விதியின்கீழே நான் தெரி விக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதால் தெரிவிக்க வில்லை. எனவே எனக்குத் தெரிவிக்காமல் இருந்தாலோ அல்லது அந்த விதியின்படி நான் அவைக்குத் தெரிவிக்காமல் இருந்தாலோ.... (குறுக்கீடு) அதற்கு மேற்கொண்டு அவர் ஏன் கைது செய்யப்பட்டார். எதற்காக கைது செய்யப் பட்டார் என்கிற விவரம் எல்லாம் நீங்கள் அறிய விரும்பி னால், முறைப்படி நீங்கள் எழுதிக் கொடுத்தால் நான் அர சிடமிருந்து அந்தத் தகவலை வாங்கி பேரவைக்குத் தெரி விக்கலாம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: கைது செய்யப்பட்டால் அது தங்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். தங்கள் மூல மாக இந்தப் பேரவைக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்பது விதி. அதற்குப் பின்னாலே நீங்கள் சொன்ன விதியிலே என்ன சொல்லியிருக்கிறது என்றால், நீங்கள் அறி விப்பதற்கு முன்பாகவே பிணையிலே விடுதலை செய்யப் பட்டிருந்தால் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. அதே போல மேல்முறையீடு காரணமாக விடுதலை செய்யப் பெற்றிருந்தாலும் நீங்கள் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. இங்கே பிணையிலே விடுதலை செய்யப்பெறவில்லை. அதுபோல, மேல்முறையீடு காரணமாக விடுதலை செய்யப் பெறவில்லை. ஆனால் விடுதலை செய்யப்பெற்றிருக்கிறார். ஆனால், ஏன் கைது செய்யப்பட்டார்? எதற்காக விடுதலை செய்யப்பட்டார்? என்பதைத் தெரிவிக்க வேண்டிய கடமை தங்களுக்கும் உண்டு. அதை நீங்கள் பேரவையிலே தெரிவிக்க வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறது என்பதைத்தான் நான் சுட்டிக்காட்டுகிறேன். இது ஒரு முறையற்றசெயல்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேட்டீர்கள். நான் பதில் சொல்லிவிடுகிறேன். விதி 289லே ரிலீஸ் என்பது எப்படி என்பது பற்றித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'When a Member is arrested and after conviction released on bail pending an appeal or otherwise released..

எனவே 'or otherwise released' என்பது கைது செய்த அந்த எக்சியூட்டிவ் அதாரிட்டியே விட்டிருக்கிறார். (குறுக்கீடு) ஆங்கிலத்தில் இருப்பதை நான் உங்களுக்கு இப்போது சொன்னேன்.

[1993 ஏப்ரல் 6

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: கைது செய்யப் பெற்ற ஒரு உறுப்பினர் தண்டிக்கப்பெற்ற பிறகு செய்து கொண்ட மேல்முறையீடு நிலுவையில் இருக்கும் பொழுது வேறு வகையில் பிணையில் விடுவிக்கப்பெற்றால் என்றுதான் இருக்கிறதே தவிர தாங்களாகவே விடுவிக்கப்பெற்றால் என்ற சொல் அங்கே கிடையாது. பிணையில் விடுவிக்கப்பெற்ற பிறகு விடுவிக்கப்பெறவில்லை. மேல்முறையீடு காரணமாக விடுவிக்கப்பெறவில்லை. எனவே, உங்களுக்குத் தெரிவிக்க வேண்டிய கடமை உண்டு. அதேபோல, நீங்கள் அறிவிப்பதற்கு முன்பே இங்கே வந்திருக்கிற காரணத்தாலே உங்களுக்கே அந்தத் தகவல் வந்திருக்க வேண்டும். எங்களுக்குத் தகவல் வரவில்லை என்பதால் இங்கே நான் சொல்கிறேன். எங்களுக்கு, நீங்கள் தகவல் தெரிவித்திருக்க வேண்டும். இப்படி கைது செய்யப்பட்டார், கைது செய்யப்பட்ட அவர் சில மணி நேரங்களில் விடுதலை செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டதற்கு இது காரணம், விடுதலை செய்யப்பட்டதற்கு இது காரணம், என்று ஏன் என்றால் அவர் பேரவை உறுப்பினர். பேரவை உறுப்பினரை அவ்வளவு இலகுவாக போலீசார் நடத்த முடியாது. பேரவை நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற காலத்திலே இப்படி ஓர் பேரவை உறுப்பினர் நடத்தப்பெறுவாரானால் பேரவை உறுப்பினர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும்கூட இந்த அவையிலே இருந்து, அவைக் கூட்டங்களுக்காக தள்ளி வைக்கப்பட்ட உறுப்பினர், எனவே, அவர் பேரவைக் கூட்டம் நடக்கிறபோது இருக்கிற இந்த ஓர் உரிமையைப் பெறுகிற எல்லாத் தகுதியையும் இழந்திருக்கிறார்.

Thiru S.R. B l subr moni n : No, it is not correct.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆனால் நான் தெரிவிக்கக்கூடாது என்பது அல்ல. விதியின்படி, கைது செய்யப்பட்ட உறுப்பினர் கைது செய்யப்பட்டார் என்று பேரவைக்கு நான் தெரிவித்திருந்தால் அவர் விடுதலை செய்யப்பட்ட செய்தியையும் பேரவைக்கு நான் தெரிவிக்க வேண்டும். அப்படி இல்லாதபோது. . . . (குறுக்கீடு)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: பேரவை விதி 120-ன் படி பேரவைக் காலம் முழுவதும் அவர் கலந்து கொள்ளக் கூடாது என்று விதிக்கப்பெற்றாலும், அவ்வாறு ஆணையிடப்பெற்ற பின், உறுப்பினர் வராமை, அரசியல் அமைப்புச் சட்டத்தின் 101-வது பிரிவு (4) உட்பிரிவின் கீழ்

வராமை குறித்து கணக்கிடுதல் சேர்த்துக்கொள்ளப் பெற மாட்டாது என்கிற காரணத்தாலே பேரவை உறுப்பினர் என்கிற முறையில் அவருக்கு எல்லாவிதமான கடமைகளையும் நிறைவேற்றுவதற்கு உரிமை உண்டு. நீங்கள் எந்த நேரத்திலும் திருப்பி அழைக்கலாம். நான் ஏற்கெனவே வேண்டுகோள் விடுத்திருக்கிறேன். இன்றைய காலையில் அவரைக் கலந்துகொள்ளச் சொன்னால், அவர் கைது செய்யப்பட்டு, விடுதலை செய்யப்படாமல் இருந்தால் அவரால் இன்றையதினம் கலந்து கொள்ள முடியாது. இப்போதும் அதையேதான் சொல்கிறேன், நீங்கள் எந்த நிமிடத்தில் வேண்டுனாலும் அவரை அழைக்கலாம், இப்போதும் அழையுங்கள் என்றுதான் நான் சொல்கிறேன். எனவே விதி 120ஐ இதற்குப் பொருத்து என்று சொல்ல முடியாது. போலிசாருக்கும் விதி 120க்கும் சம்பந்தமே கிடையாது.

முற்பகல் 11.30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் போலீசார் தெரிவிக்கவில்லை என்பதைப்போல கொண்டு செல்லக்கூடாது. போலீசார் உடனடியாக எனக்குத் தகவல் தெரிவித்திருக்கிறார்கள். நேற்று இரவே எனக்கு அந்தத் தகவல் வந்துவிட்டது. அவர் கைது செய்யப்பட்டு, விடுதலை செய்யப்பட்டு விட்டார் என்ற தகவல் எனக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் ஏற்கெனவே நான் படித்துக் காண்பித்த விதிகளின்படி, கைது செய்யப்பட்டு உடனடியாக விடுதலை செய்யப்பட்ட சம்பவங்களில் அந்தச் செய்தியைப் பேரவைத் தலைவர் இதுவரையில் பேரவைக்கு அறிவிக்கவில்லை, அந்த வகையிலே கைது செய்யப்பட்டு, விடுதலை செய்யப்பட்டார் என்கிற தகவலும் சேர்ந்தே வந்தால், அதை நான் அறிவிக்க வேண்டிய அவசியமில்லை என்று இந்த விதிகளின்படி கருதுகிறேன். எனவே நான் அறிவிக்கவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததுபோல, பேரவை நடக்கும் காலங்களில் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்படுவதே கூடாது என்று தடை செய்கின்ற வகையில் எந்த அரசியல் அமைப்புச் சட்ட விதியும் இல்லை. வெளியிலே நடக்கிற எவ்வளவோ பிரச்சினைகளுக்காகக் கைது செய்யப்படுகிறார்கள். எனவே நாம் அவர்களிடத்திலே என்ன வற்புறுத்த முடியுமென்றால் அதை உடனடியாகப் பேரவைத் தலைவருக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதுதான். அந்த வகையிலே இன்றைக்கு அது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே இதிலே மற்ற மற்ற விவகாரங்களை எல்லாம் பேச வேண்டாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அவை முன்னவர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 290-ன்படி பார்ப்போமானால், "எனினும் ஒரு உறுப்பினர் பிணையில் அல்லது மேல் முறையீடு காரணமாக விடுவிக்கப்பெற்றுள்ளதான தகவல் அந்த

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1993 ஏப்ரல் 6

உறுப்பினர் கைது செய்யப்பெற்ற செய்தியைப் பேரவைக்கு அறிவிக்கும் முன்பே கிடைக்கப்பெறின் அவர் கைதான செய்தியையும் அல்லது பின்னால் விடுவிக்கப்பெற்ற செய்தியையும் பேரவைத் தலைவர் பேரவைக்குத் தெரிவிக்காமல் இருக்கலாம்'' என்று இருக்கிறது. ஆகவே பிணையின் மூலம் விடுவிக்கப்பட்டாலும் அல்லது மேல் முறையீடு காரணமாக விடுவிக்கப்பட்டாலும் பேரவைக்குத் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை என்ற காரணத்தால், இந்த இரண்டுமே இல்லாமல் சாதாரணமாக விடுவிக்கப்பட்டாலும் தெரிவிக்க வேண்டியதில்லை என்பது தானாகவே பெறப்படுகிறது.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: Sr A clarification. The proviso is amply clear. The law contemplates release on two counts. One is by discharge on appeal and one other is release on bail. These two releases are contemplated in the due process of law. What the rule prohibits is the unlawful and unauthorised detention. That is what the Leader of the Opposition wants to point out.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத் தனியாகக் கொடுக்க வேண்டும். விதிகளின்படி நான் பேரவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்பது மட்டும்தான் இருக்கிறது. 'அன்லாபுல் டிடென்ஷன்' என்று நீங்கள் தெரிவிக்க விரும்பினால் அதை நீங்கள் வேறு வகையிலே எழுப்ப வேண்டும். அதனால்தான் எனக்கு எந்தத் தகவலும் நீங்கள் தெரிவிக்கவில்லையே என்று கேட்டேன். (குறுக்கீடு) என்னைப் பார்த்து விதிகளின்படி சில விளக்கங்களைக் கேட்ட காரணத்தால் அனுமதித்தேன். (குறுக்கீடு) 'அன்லாபுல் டீடென்ஷன்' என்று எப்படி நீங்கள் சொல்லலாம்? 'அன்லாபுல் டீடென்ஷன்' என்று நீங்கள் சொல்ல விரும்பினால் அதற்குரிய அறிவிப்பைக் கொடுத்துவிட்டுச் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) நானும் 'காமன் இன்டரஸ்டில்' தான் சொல்கிறேன். அதை எழுப்புவதாக இருந்தால், முறைப்படி எனக்கு எழுத்து மூலமாகக் கொடுத்துவிட்டு, அதை எழுப்ப விரும்புகிறேன் என்று தெரிவித்துவிட்டு, நீங்கள் தெரிவிக்கலாம். (குறுக்கீடு) இதிலே விதி தெளிவாக இருக்கிறது. அந்த விதிகளின்படி நான் பேரவைக்குத் தெரிவிக்கவில்லை. எனவே இதிலே மேற்கொண்டு பிரச்சினை வேண்டாம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் தெரிவிக்காததற்கான காரணங்களைச் சொன்னால், அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அது வேறு விஷயம். ஆனால் விதிகளின்படி தெரிவிக்க வேண்டியதில்லை, எனவே நான் தெரிவிக்கவில்லை என்று சொல்வது சரியல்ல. விதி மிகத் தெளிவாக இருக்கிறது. பிணையின் காரணமாக அவர் விடுதலை செய்யப்பட்டிருந்தால் ...து அறிவிக்கப்பட வேண்டியதில்லை. அதைப்போல மேல்

1993 ஏப்ரல் 6] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

முறையீடு காரணமாக விடுவிக்கப்பெற்றிருந்தாலும் அது அறிவிக்கப்பட வேண்டியதில்லை. அவர் தானாகவே காவல் துறையால் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். எனவே அவரை ஏன் கைது செய்தார்கள், எதற்காக விடுதலை செய்தார்கள் என்பதை எங்களுக்குத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும். அந்த விஷயத்தை நீங்கள் பேரவையில் அறிவிக்க வேண்டும். அது தான் முறையே தவிர, இப்படி காவல் துறை நடந்துகொள்வதும் காவல் துறை நடந்து கொண்டதற்குப் பின்னாலே உங்களுக்குச் சமாதானம் சொல்வதும், அதைப் பேரவையில் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை என்று சொல்வதும் முறையாக இருக்காது. ஓர் உறுப்பினர் கைது செய்யப்பட்டிருக்கிறார். கைது செய்யப்பட்ட உறுப்பினர் பிணையிலே வெளியிலே வரவில்லை, மேல்முறையீடும் செய்யவில்லை என்றாலும் விடுதலை செய்யப்படுகிறார். எதற்காக கைது செய்யப்பட்டார். ஏன் விடுதலை செய்யப்பட்டார்?

முற்பகல் 11—35

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: கைது செய்யப்பட்ட காரணத்தை எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள். விடுதலை செய்யப்பட்டார் என்ற தகவலையும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த இரண்டும் எனக்கு வந்துவிட்ட காரணத்தால் கைது செய்யப்பட்டதை நான் பேரவைக்குத் தெரிவிக்கும் முன்னரேயே விடுதலை செய்யப்பட்ட தகவலும் வந்துவிட்ட காரணத்தால் பேரவை விதி 290-ன்படி நான் பேரவைக்குத் தெரிவிக்கவில்லை. எனவே நான் விதிகளில் (குறுக்கீடு) 289-ல் மிகத் தெளிவாக 'or otherwise' என்று இருக்கிறது.

<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்</u>: தமிழில் பாருங்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: விதிகளைப் பொறுத்த மட்டில் மிகச்சரியாக ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று சொன்னால், விதிகளை நாம் தமிழிலேயும் மொழி பெயர்த்திருந்தாலும் அரசியல் சட்டத்தையும் எல்லா தேசிய மொழிகளிலும் நாம் மொழி பெயர்த்திருந்தாலும், ஆங்கிலத்திலே இருக்கிற வெர்ஷனைத்தான் அதிகாரப்பூர்வமானதாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்றே இருக்கிறது. எனவே தமிழிலே இல்லாத காரணத்தாலே மட்டும் நீங்கள் இதிலே தெரிவிக்கவேண்டியதில்லை. இதுவரையிலும் கைது செய்யப்பட்ட தகவலும் பேரவைத் தலைவருக்கு வந்து, உடனேயே விடுதலை செய்யப்பட்ட தகவலும் வந்ததையும் இதுவரையிலேயும் பேரவைக்கு அறிவிக்கவே இல்லை. அந்த மரபையும் பின்பற்றித்தான் நான் அறிவிக்கவில்லை. (குறுக்கீடு) எனவே அதிலே பிரச்சினை மேற்கொண்டு வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கிலத்திலே இருப்பதுதான் 'Authoritative' என்று சொன்னால் நான் ஏற்றுக்கொள்கிறேன். மறுக்கவில்லை. அதனாலேதான் சில நேரங்களிலே ஆங்கிலத்திலே இருப்பதை நான் படித்துக்காட்டுகிறேன். மக்களவை விதிகளையும் படித்துக் காட்டுகிறேன். பிரிட்டிஷ் பார்லிமெண்டரி சிஸ்டத்தை பற்றியும் நான் படித்துக்காட்டுகிறேன். எனவே அனைத்தையும் ஒன்றாகத்தான் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இந்த விஷயத்தில் காவல்துறை நடந்துகொண்டதும் சரி, அறிவிக்கப்படாததும் சரி, முறையல்ல என்பதை மட்டும் நான் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காவல்துறை நடந்து கொண்டது முறையற்றது என்பதை இதிலே சொல்லக்கூடாது. காவல்துறையினர் மிக முறையாக நடந்து இருக்கிறார்கள். கைது செய்யப்பட்டது ஏன் என்கிற தகவலையும் எனக்குத் தெரிவித்து, அவர் நேற்று 3 மணிக்கு விடுதலை செய்யப்பட்டார் என்கிற தகவலையும் தந்தி மூலம் எனக்குத் தெரிவித்திருக்கிறபோது இந்தப் பேரவை விதியின்படி, இந்த இரண்டிலும், அவர் கைது செய்யப்பட்டதை இந்தப் பேரவைக்கு அறிவிக்கும் முன்னரே விடுதலை செய்யப்பட்ட விபரமும் வந்துவிட்ட காரணத்தால் நான் தெரிவிக்கவில்லை, எனவே இதிலே மேற்கொண்டு விவாதம் வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

(அ) இந்தி படித்தால்தான் அகில இந்திய வானொலியில் வேலை என மைய அரசு அனுப்பியுள்ள சுற்றறிக்கை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார் . திரு ச. இராமச்சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''இந்தி படித்தால்தான் அகில இந்திய வானொலியில் வேலை என்ற நிலைமையை உருவாக்கும் வகையில் மைய அரசு அனுப்பியுள்ள சுற்றறிக்கை குறித்து'' மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.